ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

நாடுகளுக்கெல்லாம் தாய்நாடாகிய பாரதநாட்டில் பிறந்து வளர்ந்த பிரஜைகளுக்கு இதரத்தீவுகளிலிருக்கின்றவர்களைப்போல் ஸ்வகார்யமே பெரிதென்று பாவிக்கும் சுவபாவமில்லை. எல்லோரையும் தாமாகவே நினைத்து தம்முடைய சிரேயஸ்ஸுக்காகப் பாடுபடுவதுபோலவே பிறருக்கும் சிரேயஸ்ஸு உண்டாகும்படி பாடுபடுவார்கள். அதனாற்றான் நம்முடைய பிராசீனநூல்களில் பிறர் அனுபவிக்கும் ஐசுவர்யாதிகளைக்கண்டு அஸூயை, த்வேஷம் முதலிய தீயகுணங்களையடையக் கூடாதென்றும், மைத்ரீ, முதிதை முதலிய நற்குணங்களைப் பாராட்டவேண்டுமென்றும், உபதேசிக்கப்படுகின்றது. சுகத்தையனுபவிக்கின்றவனிடம் மைத்ரீயை (ஸ்நேஹத்தை) ப்பாராட்டினால் அவன் அனுபவிக்கின்ற ஸுகமெல்லாம் தான் அனுபவித்ததுபோலவே ஆய்விடும். அதெப்படியெனில்— புத்திரன் சுகப்படும்பொழுது தான் ஸுகப்படுவதாகத்தகப்பன் நினைக்கிறானல்லவா; அது எதனாலென்று ஆலோசித்தால் புத்திர வாத்ஸல்யம் பாராட்டியதே அதற்குக் காரணமென்று எல்லோருக்கும் அனுபவத்திற்கு வந்த விஷயம். இந்த திருஷ்டாந்தம்போலவே எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸ்நேஹத்தைப் பாராட்டினால் அவர்களனுபவிக்கும் ஸுகமெல்லாம் நம்முடையதேயென்று தனக்கு ஆனந்தமே உண்டாகும். ஆகவே இப்படி ஆனந்தப்படவேண்டியிருக்க, அஸூயைப்பட்டு, பிறர் அனுபவிக்கும் ஸுகத்தைக்கண்டு துக்கப்படுவது உசிதமில்லையென்றே அஸூயாதிகள் விலக்கப்படுகின்றன. இப்படி நற்குணசீலர்களைப் பெற்றுவளர்த்த நம் பாரதமாதா கலியின்கொடுமையால் சுயகார்யமே பெரிதென்று பாவிக்கும் பிரஜைகளையும் ஸந்தியாகால கொடுமையால் ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு இவர்களைப் பெற்றவள் போல் பெற்றுவிட்டாள். அம்மட்டோடில்லாமல் வளர்த்து வருகிறாள். அதனால் பெற்றோர், உற்றோர், பெரியோர் முதலியவர்களிடம் மரியாதையில்லாமல் அவர்களைப் பழிப்பதும் துன்புறச்செய்வதுமே சரியான கார்யமென்று நடத்திவருகிறார்கள். தன்னைப்பெற்றோரையே மதியாதவர்களா மற்றோரை மதிக்கப்போகிறார்கள். அப்படியிருக்கையில் லோகாந்தரத்திலிருந்துகொண்டு இவர்கள் அக்னிமுகமாகவும் பிராமணர் முகமாகவும் கொடுத்தனுப்பும் ஹவிர்ப்பாகாதிகளுக்காக இவர்கள் கையைப் பார்த்துக்கொண்டிருக்கும் தேவாதிகளை எங்கே ஆராதிக்கப்போகிறார்கள். அவர்களது திருப்திக்காகவென்று வர்ணாசிரமதர்மத்தை எங்கே அனுஷ்டிக்கப்போகிறார்கள் என்று தேவாதிகளுக்குக்கூட கவலையையுண்டுபண்ணக்கூடிய கார்யத்தையும் அவர்கள் செய்யத் தலைப்பட்டுவிட்டார்கள். ஆயினும் ஸாத்துவிகர் அனேகர் ஸதாசாரத்தைக் கைவிடாமலிருப்பதிலிருந்து தேவர்கள் திருப்தியடைந்து பாரதநாட்டாருக்கும் அனுக்கிரஹம் செய்துவருகிறார்கள். எல்லோருமே அந்த அனுக்கிரஹத்திற்குப் பாத்திரமாவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

உ

# ஆர்யதர்மம்.

பிரமோத-ஸூ ஆனி-மீ ௫௨

## தேவானுக்கிரஹமே வேண்டியது.

த்வீபாந்தரத்தில் நடக்கும் சமாசாரங்களைப் பத்திரிகா மூலமாயும் அவ்விடம்போய் வந்தவர்கள் மூலமாகவும் இங்கிதங்களைக் கொண்டும் தெரிந்துகொள்வதுபோல் லோகாந்தரத்தில் நடக்கும் விருத்தாந்தங்களையும் தெரிந்துகொள்வதற்காக நம் பெரியோர்கள் ஓர் உபாயத்தைக் கண்டுபிடிக்காமலிருக்கவில்லை. நம் பெரியோர்களில் சிலராவது அவ்விடங்களில் போக்குவரத்து வைத்துக் கொள்ளாமலிருக்கவில்லை. லோகாந்தரங்களில் நடப்பதைத் தெரிந்துகொள்வதற்குள்ள உபாயமாவது சுருதிஸ்மிருதி இதிஹாஸங்களேயாகும். அவைகளைக்கொண்டு ஸ்வர்க்காதி லோகங்களில் நடக்கும் விஷயங்களைச்சில 'திருஷ்டாந்தமூலமாகத் தெரிந்து கொள்வார்கள். அதாவது— தேவலோகத்தார் தற்போது மானிடலோகவாசிகளிடம் எவ்விதமான எண்ணங்கொண்டிருக்கிறார்களென்பதைச் சில இங்கிதங்களால் ஊஹித்துக்கொள்வார்கள் சரியான காலத்தில் மழைமாரி பெய்து தான்யாதிகள் அபிவிருத்தி அடைந்து எங்கும் சுபிக்ஷமாகவும், பிளேக் போன்ற கொடிய நோவு நொடியில்லாமலும் மனிதர்களிருந்தால் தேவலோகத்தார் மனுஷ்யலோகத்தாரின் செய்கையில் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறார்களென்று தெரிந்துகொள்வார்கள். காலத்தில் மழைமாரி இல்லாமல், துர்பிக்ஷம்பிடித்து, புதிதுபுதிதான வியாதிகளால் பீடிக்கப்பட்டுக் கஷ்டப்படுவதைக் கண்டால் இவர்கள் தேவர்களுக்குச் செய்யவேண்டிய சடங்கைச் செய்யவில்லை. அதனால் தேவர்கள் சரியான மழையை ஏற்படுத்தவில்லையென்று தேவர்களுடைய கோபத்தையும் தெரிந்துகொள்வார்கள். அவ்விதமாக முன்னோர்கள் ஊஹித்தபடி தற்காலத்திலும் பிராமாணிகனான புத்திமான் ஆலோசித்தானாகில் தேவலோகத்தார் பூமண்

டல வாஸிகளிடம் தற்காலம் கொண்டுள்ள எண்ணம் இன்னதென்று தெரியாமற்போகாது. அவர்களது அநுக்கிரஹமில்லாமல் ஒரு காரியத்தையாவது ஸாதித்துவிட மனிதர்களுக்குச் சக்தி கிடையாது. தேவர்கள் ஒருவிதமாக ஸங்கல்பித்துவிட்டால் அதைமாற்ற மனிதர்களால் எவ்விதத்திலும் முடியாது. அமானுஷ சக்திவாய்ந்த அஸுரர்களும் தேவர்களுக்கும் போட்டியாக நடத்த முடியவில்லையென்றால் எவ்விதசக்தியுமில்லாத மனிதர்களா நடத்திவிடுவார்கள்! அதற்குக்காரணம்- பேசுவதிலும், பார்ப்பதிலும், கேழ்ப்பதிலும் இவ்வாறு ஒவ்வொரு இந்திரிய வியாபாரம் செய்யும் பொழுதெல்லாம் ஸத்வகுணமே மேலிட்டிருக்கும்படி செய்வதிலிருந்து தேவர்களுக்குப்புண்ணியமே மேலிட்டிருந்தது. அதனால் அவர்கள் ஸத்தியஸங்கல்பர்களாயிருந்தார்கள். அசுரர்களோவெனில்- அடி-பிடி-வெட்டு-குத்து-கொல்லு என்று செய்யுங்காரியங்களெல்லாம் ரஜோகுண தமோகுணங்களே அதிகப்பட்டிருக்கும்படி நடத்துவார்கள். அதனால் அவர்கள் செய்யும் ஒவ்வொரு கார்யங்களிலும் பாபமே அதிகப்பட்டுவந்ததாம். அதனால் அசுரர்கள் நினைப்பதொன்று நடப்பதொன்றாயிற்று. அதுபோலவே தற்காலத்திய புதுநாகரீகம் மேலிட்ட பிராணிகள் பேசுகின்றபேச்சையும், தின்கின்றபண்டங்களையும், மற்றபடிநடத்துகின்ற நடத்தைகளையும் பார்த்தால் ஒவ்வொன்றிலும் அளவிலடங்காப் பாபமுண்டாகுமென்று ஊஹிக்கவேண்டியதாகின்றது. அப்படியிருக்கையில் இவர்கள் நினைத்தபடி நடப்பதெங்கே. இவர்கள் சகல சிரேயஸ்ஸுக்கும் அடிப்படையான வர்ணாசிரமதர்மத்தைத் துவேஷிப்பதிலிருந்தே இவர்களுக்கு தேவானுக்கிரஹம் கிடைக்க வழியில்லாமல் போயிற்றே. அதில்லாவிடில் எதுதான் கைகூடும். ஆகையால்தான் நினைத்தபடி காரியத்தைநிறைவேற்ற வேண்டுமானால் தேவானுக்கிரஹம் பெறவேண்டும். அதற்காக யாவரும் வர்ணாசிரமதர்மத்தை ஆதரிக்கவேண்டும். சுபம்!

பத்திராதிபர்.

உ

## || श्री गुरुभ्यो नमः ||

## தலையூர் வர்ணாச்ரம தர்மஸபையில் முடிகொண்டான் பிர்மஸ்ரீ, வைத்திநாத சாஸ்திரிகளவர்கள் செய்த உபன்யாஸத்தின் சுருக்கம். (29-5-30ல்)

இவ்வூரில் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களால் ஓர் வித்யாசாலை ஸ்தாபிக்கப்பட்டு அதில் அனேகவித்தியார்த்திகள் வந்து வித்தியா பூர்த்தி அடைந்துவருகிறார்கள். ஷை வித்தியாசாலையில் இவ்வருஷம் நடைபெற்ற ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவத்தின் கடைசி தினத்தன்று ஓர் வர்ணாச்ரம தர்மஸபை ஸ்தாபிக்கப்பட்டு ஷை ஸபையில் மாதம் இருமுறை உபன்யாஸம் செய்கிறதென்று தீர்மானிக்கப்பட்டதின்பேரில் ஷை தீர்மானத்தை அனுஸரித்து நான் சில விஷயங்களை சொல்லத்தொடங்குகிறேன்.

कौमार आचरेत्प्राज्ञः धर्मान् भागवतानिह ।
दुर्लभं मानुषं जन्म तदप्यर्थदमध्रुवम् ॥

என்று ப்ரஹ்லாத ஸ்வாமி தன் ஸ்னேகிதர்களைக் குறித்துச்சொல்கிறார். அதாவது ஹே பாலர்களே! லோகத்தில் விவேகமுள்ளவன் பால்யத்திலேயே பகவானால் சுருதிஸ்மிருதி மூலமாய் தெரிவிக்கப்பட்ட வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டிக்கவேண்டும். ஏனென்றால் மனுஷ்ய ஜன்மம் கிடைப்பது ரொம்பவும் அரிது. வெகு ஜன்மங்களில் செய்த புண்ணியத்தினால் தான் மனுஷ்ய ஜன்மம் வரவேணும். அதிலும் பிராம்மண சரீரம் உத்தமம். ஆகையால்தான் ஆசாரியாள் 'जन्तूनां नरजन्मदुर्लभमतः पुंस्त्वं ततोविप्रता' என்று சொன்னார்கள். அப்படிக்குயர்ந்த பிராம்மண சரீரமும் அநித்தியமே. ஆகையால் தான் "इदं शरीरं जलबुद्बुदोपमम्" என்ற வசனம் நீர்க்குமிழிபோல் இந்த சரீரம் நச்வரமென்று தெரிவிக்கிறது. ஆகையால் இச்சரீரத்திற்கு ஜரை முதலிய உபத்திரவங்கள் வருவதற்குமுன் ஈசுவராக்ஞையால் ஏற்படுத்தப்பட்ட ஸத்தர்மங்களை அனுஷ்டிக்கவேண்டும். பகவானுடைய ஸ்மரணம் அவச்யமிருக்கவேண்டும். ஆகையால்தான்

कृष्णत्वदीयपदपङ्कजपञ्जरान्तमद्यैव मे विशतु मानसराजहंसः ।
प्राणप्रयाणसमये कफवातपित्तैः कण्ठावरोधनविधौ स्मरणं कुतस्ते ॥

என்று ஓர் பக்தர் இப்பொழுதே தங்கள் ஸ்மரணம் இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறார். இப்பொழுதோவென்றால் மேற்குதேசத்தார்களின் ஸம்பந்தத்தால் ஜனங்களுக்கு தங்கள் தங்கள் தர்மங்களில் பிரவிருத்தி குன்றி பிறதர்மங்களில் பிரவிருத்தி ஏற்பட்டுவிட்டது. பாச்சாத்தியர்களுக்குதிருஷ்டமான அர்த்தத்தில்தான் பிரவிருத்தி, அதையனுஸரித்து ஜனங்களுக்கவ்விதமே பிரவிருத்தி உண்டாகிவிட்டது. அப்படிப்பட்ட ஜனங்களின் மனஸ்ஸைத்திருப்புவதற்காகவே இம்மாதிரி வர்ணாச்ரமதர்மஸபைகள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அதில் இப்பொழுது விவாகவிஷயமாய்ச் சொல்வோம். திருஷ்டார்த்தத்தையே கைக்கொண்டவர்களான பாச்சாத்தியர்களின் பாஷாதிகளை அப்யஸிப்பதால் நம்மவர்களின் புத்தியும் திருஷ்டார்த்தத்திலேயே பிரவர்த்தித்து விட்டது. கேவலம் பசுவாதி ஸாதாரணமான ஸ்திரீ ஸம்போகத்தையே உத்தமமான விவாககர்மாவுக்குப் பலனாகக் கருதுகிறார்கள் அந்த பாச்சாத்தியர்களுள் சிலர் ஹிந்துமதஸ்தர்களின் விவாஹாதிவியவஸ்தையைச் சிலாகிக்கிறார்கள். இப்படியிருக்க திருஷ்டார்த்தத்தையே கருதினோமானால் கஷ்டமும் ஸ்வமத ஹானியும் ஸாங்கர்யமும் ஏற்படுமென்பதில் ஸந்தேகமில்லை. ஆகையால் இவை வாராமலிருப்பதற்காக தற்காலம் விவாக விஷயமாய் ஏற்படுத்தியிருக்கும் சட்டத்தை மீறி நடக்கவேணும். ஈசுவராக்ஞை பெரியதே தவிர ராஜாக்ஞை பெரியதல்ல. அப்படிச் சட்டத்தை மீறியதால் காராகிருகபிரவேசாதிகள் ஏற்பட்டு விட்டால் ஆபத் விஷயத்தில் அவ்வளவு தோஷமில்லை. ஆகையால் பால்யவிவாஹம் செய்யவேண்டியது அவச்யமே. பிராம்மண்யமோவென்றால் பிராம்மண ஸ்திரீயினிடத்தில் பிராம்மணனுக்கு உண்டான ஸ்திரீபுருஷர்களுக்குத் தான் ஸித்திக்கும்.

அப்படிக்கில்லாவிடில் ஸாங்கர்யாதிகள் ஏற்பட்டுவிடும். தற்காலத்திலோ ஆர்யஸமாஜம் பிரம்மஸமாஜம் முதலிய சில மதங்கள் பரவுகின்றன. ஆகையால் பூர்வாசார்யாளின் மதத்தை அனுஸரித்து ஸ்திரீகளுக்கு உபநயனஸ்தானமாகக் கூறப்பட்ட விவாகத்தை பால்யத்திலேயே செய்யவேண்டும். காம்யம், நித்தியம்,

நித்தியகாம்யம்என்று மூன்றுவிதமான தர்மங்களுள் விவாகத்தை நித்தியகாம்யமென்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதில் ஸ்திரீகளுக்கு நித்தியமென்றும் புருஷர்களுக்கு காம்யமென்றும் ஆகையால் நித்யகாம்யமென்று அர்த்தம். "गर्भाष्टमे" என்னும் வசனங்களால் பிராமணனுக்கு உபநயனம் எப்பொழுது விதிக்கப்பட்டிருக்கிறதோ அப்பொழுது ஸ்திரீகளுக்கு விவாஹம் சொல்லப்பட்டிருக்கிறது. வாதக்ஷிணையினால் ச்ரமம் ஏற்பட்டால் அதற்குப் பரிஹாரமாக வேறு மார்க்கத்தைத் தேடவேண்டுமே தவிர பால்யவிவாஹத்தை விடக்கூடாது. பின்னும் ஸ்வதர்மத்தை எப்பேற்பட்ட ஆபத்காலங்களிலும் விடக்கூடாது. ஸ்வதர்மானுஷ்டானத்தால் மாணம் வந்தாலும் நலம் என்று பகவானும் கூறியுள்ளார். சத்தர்மத்தை அனுஷ்டித்தால் தேவர்களுக்குப் பிரீதி ஏற்படுகிறது. விவாஹம் திருஷ்டப் பிரயோஜனம் மாத்திரம் உடையதன்று.

அதிருஷ்டபலத்தையும் உத்தேசித்துதான் விதிக்கப்படுகின்றது. அர்த்தத்தைக்காட்டிலும் ஸ்வதர்மம்தான் பெரிது. ஆகையால் தான்,

ब्राह्मणस्य तु देहोऽयं नोपभोगाय कल्पते ।
इह क्लेशाय महते प्रेत्यानन्तसुखाय च ॥

என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது பிராமணனுக்குச் சரீரமானது போகத்தை அனுபவிப்பதற்காக ஏற்பட்டதன்று. இங்கு கஷ்டப்பட்டு தர்மங்களைச்செய்து மறுமையில் சுகத்தை அடைவதற்காக. ஆகையால் தர்மம் மேலானதென்று தெரிகிறது. லௌகிக வியவஹாரத்தில் எல்லோரும் ஸமானம்தான். ஆகையால் தான் "पश्वादिभिश्चाविशेषात्" என்று பாஷ்யக்காரரும் கூறி இருக்கிறார்கள். பரமமான சுகத்தை இந்த சரீரத்தால்தான் அடையவேண்டும். ஆகையால் பிரஹலாதஸ்வாமி சொன்ன ரீதியாய் ஸத்தர்மங்களை அனுஷ்டித்து எல்லோரும் ச்ரேயஸ்ஸையடையவேண்டுமென்றும் சபை அபிவிருத்தி ஆகவேண்டுமென்றும் பரமேசுவரனை பிரார்த்திக்கிறேன் என்றுஉபன்யாஸத்தை உபஸம்ஹாரம் செய்தார்கள். பிறகு ஷை உபன்யாசத்தில் வெகுபேர்கள் தங்களுக்கிருந்த ஸந்தோஷத்தை கரகோஷத்தால் தெரிவித்து, ஷை சாரதாசட்டத்தை அனுசரிக்க இஷ்டமில்லாமல்

" यद्वैकिञ्चनमनुरवदत्तद्भेषजम् " மனு சொன்னது மருந்து என்ற சுருதி பிரகாரம் மனுவின் சட்டப்படி பாலிகாவிவாகத்தையே செய்வதாகத் தீர்மானித்து " दौर्मन्त्र्यान्नृपतिर्विनश्यति " என்கிற படி தர்மஸூக்ஷ்மத்தைத் தெரிந்துகொள்ளாமல் தாறுமாறாய் பேசும் சட்டஸபையோர்கள் பிரேரணைக்கிடுபட்டு நமது கனம் கவர்ன்மெண்டு சாரதாமசோதா போன்ற அதர்மச் சட்டங்களை அனுஷ்டிக்கச் செய்து சீர்கேடடையாது ஷை சட்டத்தை ரத்து செய்து நீடூழிகாலம் நமது அரசன் வாழ்ந்திருக்கவேணுமாய் பிரார்த்தித்தார்கள்.

இது விஷயங்களைப்பத்திரிகைகளுக்கு தெரிவிக்கவேணுமாய் ஷை ஸபையோர்கள் தீர்மானித்தார்கள்.

கு. கிருஷ்ணய்யர்,
அத்வைத வித்தியாசாலை வர்ணாசிரமதர்ம ஸபை காரியதரிசி.

---

# மந்திரசாஸ்திர மஹிமை.

(230-வது பக்கத்தொடர்ச்சி)

இச்சீவன் வஸிக்குமிடம் அனாஹதம் என்னும் 4வது ஸ்தானமான ஹிருதயம். அங்கு வஸிக்குமிடம் அங்குள்ள தாமரை மொட்டுப்போன்ற மாம்ஸபிண்டத்தில் சூக்ஷ்மமாய் இருக்கும் த்வாரத்தில் இருக்கின்றது. இதையே ஹிருதயகுகை என்று வேதம் உபனிடதம் கோஷிக்கிறது இம்மொட்டுப்போன்ற தாமரை நிமிர்ந்திராமல் கீழ்நோக்கித் தொங்குகிறது. ஆகவே இச்சீவன் கதி அதோமுகம்தான். இவன் பரமாத்மதரிசனம் அடைய வேண்டுமாயின் இக்கமலம் மேல்நோக்கியமுகமுள்ளதாய் ஆக வேண்டும். அவ்விதம் செய்தால்தான் மேல்ஸ்தானத்தில் லலாடம் என்றவிடத்தில் பரமாத்மதரிசனம் சுலபமாய்க் கிடைக்கும். அவ்விதம் அக்கமலத்தை நிமிர்த்த இவனுக்குச் சக்தி ஏற்படவேண்டும். அது பாஹ்யமான யந்திராதிகளால் முடியாது. மந்திரப்ரபாவம் ஒன்றால்தான் முடியும். இதிருக்கட்டும், இவன் ஏதோ மந்திரப்பிரபாவத்தால் அவ்விதம் செய்துவிட்டால் உடனே பரமாத்மதரிசனம் ஏற்பட்டுவிடுமோவெனில் அதுவுமில்லை. அங்கு அவனுக்குத் தடங்கலாய் விசுத்தி என்ற 5-வது ஸ்தானமான

கண்டஸ்தானத்தில் 16 அழுத்தமான கம்பிகளால் உறுதியாய்க் கட்டப்பட்டு கெட்டியான ஆவாணத்தால் மூடப்பட்ட அந்தக் கர்ணமென்ற ஓர் குடை விசாலமாய் மறைத்துக்கொண்டிருக்கிறது. இதனுல் உபரிஸ்தானத்தில் இருக்கும் பரமாத்மப்ரகாசம் அச்சிவனிடத்தில் விழாது. ஆகவே அக்குடையை அகற்றவேண்டும். இவ்வபிப்பிராயத்தை உள்ளடக்கியே போஜனது சபையில் ஓர் கவி—

राजन् कनकधाराभिस्त्वयि सर्वत्र वर्षति ।
अभाग्यच्छत्रसंछन्ने मयि नायान्ति बिन्दवः ॥

அரசனே! நீ ஸ்வர்ணவர்ஷமாய் எங்கும் பொழியும்போது அபாக்கியம் என்ற குடையால் நன்கு மறைக்கப்பட்ட என்னிடத்தில் துளிகூட விழவில்லை என்ருர். அதாவது அரசன் யாசகர்களுக்கு ஏராளமாய் பணத்தை இயற்கையாய்க் கொடுக்கிருன். அப்படி இருந்தும் மிக துர்பாக்கியத்தால் நான் இன்னும் தரித்திரனுகவே இருக்கிறேனென்று கருத்து. ஆனுல் இக்கருத்து உண்மையாய் இக்கவியின் அபிப்பிராயமல்ல. ஏனெனில் அரசன் தாரித்திரிய சப்தத்தையே சகிக்காதவன். மற்றும் அவனைப் பார்க்கும்வரை தான் தாரித்திரியம், பார்த்தபிறகும் நிற்குமா? ஆகவே இதன் உண்மையான அர்த்தம் இது, ஓ குருராஜனே! நீ கனகமென்ற அமிர்தவர்ஷம் வர்ஷித்தும் அபாக்கியம் என்ற காமக்குரோதம் முதலிய கம்பிகளோடு கூடிய குடையின் மறைவால் என்னிடத்தில் ஒரு துளிகூட விழவில்லை என்று குருவைப் பிரார்த்தித்ததாய் ஏற்படுகிறது. ஆகவே இந்த அந்தக்கரணமென்ற குடையைச் சுருக்கவேண்டுமானுல் பரமகுருவின் பரமகருணை முக்கியம். இதை எவ்விதமென்றறிவோம்.

விரித்த இக்குடைக்கு மூன்று பலமானகட்டுகள் இருக்கின்றன. அம்மூன்று கட்டுகளும் முதலில் அவிழ்க்கப்படவேண்டும். அது மூலாதாரத்திலும் ஹிருதயஸ்தானத்திலும் புருவங்களின் மத்தியஸ்தானத்திலுமிருக்கின்றன. அவைகளுக்கு முறையே பிர்மகிரந்தி, விஷ்ணுக்கிரந்தி, ருத்ரக்கிரந்தி என்று பெயர். இவைகளை அறுக்க பராசக்தியினனுக்ரஹம்வேண்டும். அதனுல்தான் தேவீஸ்துதியில் ब्रह्मग्रन्थि विभेदिनी विष्णुग्रन्थि विभेदिनी रुद्रग्रन्थिविभेदिनी என்றிருக்கிறது. இவைகள் அறுபட்டவுடன்

அக்குடையின் கம்பிகள் அப்படியே விழுந்துவிடுகின்றன. கம்பிகள் விழுந்தால் ஆவரணம் போய்விட்டது. அப்போது பரமாத்மாவின் பிரகாசம் தடங்கலின்றி வரும். பிறகு தலைகீழான ஹிருதய கமலத்தை நிமிர்த்தவேண்டும். நிமிர்ந்தபிறகு பரமாத்மப்ரகாசத்தால் அது மலரும். அப்போது அதிலுள்ள ஜீவன் சேரில் பரமாத்மாவைப் பார்க்கலாம். பிறகு வேண்டிய சித்தியைப் பல வழிகளாலடையலாம். இனி முற்கூறப்பெற்ற கிரந்திகள் அறுபட பராசக்தியின் அனுக்ரஹத்திற்கும் காரணம் ஒன்று வேண்டும். அது பக்தியோகத்தாலேற்படலாம். பிராணாயாமத்தாலடையலாம். இங்கு பிராணாயாமம் முதன்மையான காரணமென்பதே மந்திரசாஸ்திரத்தின் முக்கியமான கருத்து. அது குருவின்மூலமாய்த்தான் ஸித்திபெறலாம். குருவின் கருணையின்றிச்செய்யப்படுவது தேகத்திற்குக் கெடுதலை உண்டுபண்ணிவிடும். அதற்கு சாமான்யவழியால் ஆரம்பிக்க பிரணவம் வ்யாஹ்ருதி காயத்ரீ சேர்ந்த மந்திரத்தை தனித்தனி மனதால் உச்சரித்துச் செய்யப்படவேண்டும். அப்படி உச்சரிக்கும்போது ரேசகம் பூரகம் கும்பகம் என்ற மூன்றுகளால் பிராணனை அடக்கிவிடவேண்டும். அதாவது ரேசகம் என்றால் தேகத்துள்ளிருக்கும் வாயுவை மெதுவாய் வெளியேற்றல். இப்போது காலவளவு வேண்டும். அதற்குமுன் சொன்ன பிராணாயாமமந்திரத்தை மனதில் உச்சரிக்கவேண்டும். பிறகு வெளியிலுள்ளவாயுவை அம்மந்திரகாலவளவால் மெதுவாய் பக்கத்திலிருப்பவனுக்கும் சப்தம் தெரியாமல் உள் இழுக்கவேண்டும். இவ்விதம் உட்சென்ற வாயுவை அம்மந்திர காலவளவால் நிறுத்தவேண்டும். உள் இழுப்பதை ரேசகம் என்றும், நிறுத்துவதைக் கும்பகமென்றும் சொல்வார்கள். இவ்விதம் செய்வதிலும் நாசித்வாரம் இரண்டில் ஒன்றின் வழியையடைத்து மற்றொன்றால் வாயுவை உள் இழுத்து பிறகு அதையும் அடைத்து வாயையும் மூடி கும்பகத்தால் நிறுத்தி இழுத்த த்வாரத்தை திறக்காமல் மற்றொரு த்வாரத்தால் வாயுவை விடவேண்டும். உடனே வாயுவை விட்ட துவாரத்தால் இழுக்கவேண்டும். மற்றொன்றால்விடவேண்டும். இவ்விதம் மாற்றிமாற்றி அப்பியாஸம் செய்யவேண்டும். இந்த நாசித்வாரங்களுக்கு இடா—பிங்களா என்று பெயர். இடா நாடியால் இழுத்தால் பிங்களாநாடியால் விடவேண்டும், பிங்களாவால் இழுத்தால் இடாநாடியால்விடவேண்டுமென்றாயிற்று. இது

எதற்காகவெனில் பரமசித்திகளுக்கு மார்க்கம். இது தேகத்தி லுள்ள வியாதிகளை நீக்கும். தேகத்திற்கு ஆயுளை வளர்த்துவிடும். அணிமாதிசித்திகளைப்பெறலாம். முதலில் இது அப்பியஸிக்கப் படும்பொழுது பிராணாயாமத்தால் ஜீவன் மூலாதாரத்தில் சர்ப்பம் போல் வளைந்து சோர்ந்து கிடக்கும் நாடியைக் கிளப்புவான். இதைக்குண்டலினீ என்பார்கள். இதுதான் பரம அனர்த்தங்களை விளைவித்துக்கொண்டிருக்கிறது. இது அங்கு சுருண்டுகிடக்கக் கூடாது. இதைப் பிராணாயாமபலம் ஒன்றால்தான் கிளப்பலாம். பிராணாயாமபலம் ஏறிவிட்டால் அது இக்குண்டலினியைத்தட்டிக் கிளப்பிவிடும். உடனே சர்ப்பம்போல் அது கிளம்பி ஊர்த்வமுக மாய்ப் போகத்தான் வழியுண்டு. இது உயரக்கிளம்புவதால் உடனே ஹிருதயகமலம் நிமிர்ந்துவிடும். பிறகு ஸித்தபுருஷனல் லவா? இந்த சித்திபெற்றவன் ஸமஸ்தலோகசஞ்சாரியாவான். ஸமஸ்தலோகங்களும் வெளியிலுள்ளனபோல் உள்ளிலும் உண்டு. ஆகவே பூ: என்று தியானிக்கும்போது இவனது ஜீவன் புருவங் களின் மத்தியிலுள்ள ஆக்ஞாசக்கிரத்தில் நின்றுபார்த்தால் பூமி முழுமையும் பார்த்துவிடுவான். உதாரணமாய்ப் பட்டணத்தை முழுமையும்ஏககாலத்தில் பார்க்கவேண்டுமென்று எண்ணுகிறவன் திருச்சியில் உச்சிப்பிள்ளையார் கோவிலில் ஏறிப்பார்த்தால் யாவை யும் கண்கூடாய் சுகமாய்ப்பார்க்கிறானல்லவா! அதுபோல்ஆக்ஞா சக்கிரத்தை அடைந்த ஜீவன் தேகத்தின் கீழ்பாகமான இருபக்கங் களிலுமுள்ள ஸமஸ்தலோகங்களையும்பார்த்தால் எல்லாம் உள்ளங் கைநெல்லிக்கனிபோல் பிரகாசிக்கும். அப்போது எந்தஉலகத்தின் சமாசாரத்தையும் பிறருக்கு அறிவிப்பான். ஆதல்பற்றியே ரிஷி கள் கண்களை மூடிக்கொண்டு தியானதிருஷ்டியால் பார்க்கிறார்க ளென்கிறோம். இவ்விதம் உண்மை சித்திபெற்ற புருஷன் உலகி லுள்ள எப்பதார்த்தத்தையும் அல்பமாய் வெறுப்பான். அவர்கள் தன்னுள் ஸமாதியாலடக்கி ஆத்மானந்தத்தில் மூழ்கிவிடுவார்கள். இவர்களுக்கு ஒரு பலனிலும் இச்சையில்லை. இதையே ஸ்ரீ நீல கண்ட தீக்ஷிதர் ஸ்ரீமீனாக்ஷியின் திக்விஜயயாத்திரையில் ஹிமயமலை சென்றிருக்கும்போது அங்குள்ள வேடர்கள் வந்து அம்மையை தரிசித்து கூறுவது இது.

नाचक्षते ननिमिषन्ति नानिश्वसन्ति वल्मीकतः प्रसृमरा वपुषा तु मर्त्याः ।
सन्तिद्रुमा इहशतं दलपुष्पहीनाः छित्वा नयामि यदिदेवि दिदृक्षसे तान् ॥

தேசியே இங்கு சில மரங்களிருக்கின்றன. அதற்கு இலைகளாவது பூக்களாவது கிடையாது பார்த்தால் மனிதர்களாய்த் தோன்றுகின்றன. ஆனால் பேசவில்லை, கண்கொட்டுவதில்லை, மூச்சுவிடவில்லை வேண்டுமானால் பிடுங்கிக்கொண்டு வருகிறோம் என்றனர். இதில் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது இது—இவர்கள் மரமில்லை. மகாதபஸ்விகள். இவர்கள் மிகபலமான பிராணாயாமத்தால் சுவாஸத்தை அடக்கினவர்கள். சுவாஸத்தை அடக்குவது தான் பிராணாயாமம். இவ்விதம் பூர்ணஸித்திபெற்றவர்களுக்கு உலகில் விரும்பத்தக்க பதார்த்தம் உண்டா. இப்பிராணாயாமம் தேகத்திலுள்ள ஸமஸ்த வியாதியையும் போக்கும்.சரீரத்திலுள்ள எலும்புகள் வஜ்ரம் போலாகும். பசி தாகம் கிடையா. ஆயுள் கணக்கின்றி ஆகும். அனேக மகரிஷிகள் அனேக ஆயிரம் வருஷங்களிருந்தனரென்று புராணங்களின்கூற்று. தசரதர் 60000 வருஷமிருந்தனர். ஸ்ரீராமர் 11000-வருடம் இருந்தார். இதெல்லாம் எதனால்? இப்பிராணாயாமத்தின் பலத்தால்தான் ஆனால்,

अरोगास्सर्वसिद्धार्थाश्चतुर्वर्षशतायुषः ।
कृतत्रेतादिषु ह्येषामायुर्ह्रसति पादशः ॥

ரோகமற்றவர்களாயும் ஸமஸ்தகாரியசித்தி பெற்றவர்களாயும் 400 வருடம் ஆயுள் உள்ளவர்களாயும் இருந்தனர். ஆனால் கிருதயுகத்தில் 400-அடுத்ததில் 300-அடுத்தது 200 பிறகு 100 என்று பொருள் கொள்ளல்வேண்டுமே என்ற மனு சுலோகத்தின் கருத்து யாதெனில் கூறுவாம். அந்தந்த யுகங்களில் ஆகாரவ்யவகாரத்திற்கு எற்றவாறு ஸாமான்யமாய் தன்கடத்தைக்காப்பாற்றிக் கொண்டிருப்பவன் அவ்விதம் அந்தந்த யுகத்தில் இருப்பான். அத்தியாகாரம் முதலிய துர்குணங்கள் நேர்ந்தால் எப்போதும் அல்ப ஆயுள்தான். திருஷ்டாந்தமாய் இப்போது அத்தியாகாரம் முதலிய தோஷத்தால் அகாலமரணமும், அல்ப ஆயுளும் எற்பட்டுவிட்டது. ஆகவே கிரமமான அனுஷ்டானத்தோடிருப்பவன் வேதவிகிதமான யோகத்தை குருபதேசமூலம் அறிந்து அனுஷ்டிக்க ஆரம்பித்தால் அவனது சித்திக்குத் தக்க பலன் உள்ளங்கை நெல்லிக்கனிதான். இனி இப்பிராணாயாமம் ஆயுள் விருத்திக்கு எவ்விதம் காரணமாகுமென்பதைக் கவனிப்பாம். மனிதன் 1-நாளுக்கு 21600-மூச்சிக்காற்று விடுகிறான். நெற்றியில்

ஒவ்வொருவனுக்கும் மூன்று வரி பிர்மலிபியிருக்கிறது. அவற்றுள் முதல்வரியில் இச்சரீர இவ்வளவு மூச்சுக்காற்றுவிடுவான். என்பது. இரண்டாவது அதில் ஒரு நாளில் 21600 மூச்சுவிடுவான் மூன்றுவது வரியில் காமத்தாலும் கோபத்தாலும் பிராணயாமத்தால் ஒரு முகூர்த்தத்திற்கு 2600 மூச்சுக்காற்று செலவழியும். அறிஞர்களே! இதனால் நமக்கேற்பட்டதென்ன. ஒவ்வொருவனும் முதல் வரியிலுள்ள சுவாஸம் செலவழிந்த பிறகு தான் இறப்பானென்பது நிச்சயம். இரண்டாவது வரியில் கூறிய படி செலவழிந்ததுபோக மூன்றுவது வரிப்படி அக்கிரமமான செலவால் அல்ப ஆயுள் என் எற்படாது. ஆதல்பற்றியே மிருத்யு அபமிருத்யு என்று சொல்லுகிறுர்கள். ந்ருஸிம்மதபனபாஷ்யத்தில் ஸ்ரீ பகவத்பாதாள்.

" मृत्युः साक्षात् कालप्राप्तः । जातकर्मणि गणितशास्त्रनिर्णीतायुः परिमाणादन्तरा मृत्युरपमृत्युः "

மிருத்யுவென்பது ஸரியானகாலத்தில் வருவது. கணிதசாஸ்திரத்தில் கூறப்பட்ட ஆயுஸ்ஸுக்கு உள்ளாகவே எற்படும் மிருத்யு அபமிருத்யு எனப்படும் என்றுர்கள். இதனால் ஜாதகம் பார்த்து ஜோஸ்யர் கூறும் வயதில் நடுவிலேயே ஆயுள் போய்விடுவதற்குக் காரணம் இருக்கிறதென்றேற்பட்டது. இதுபோல் ஒரு நாளில் விடும் சுவாஸம் 21600-ல் ஒவ்வொரு நாளும் பிராணயாமத்தால் கொஞ்சம் கொஞ்சம் குறைத்தும் மூன்றுவது வரியில் கூறியபடி துர்வினியோகம் செய்யாமலும் இருந்தால் எற்பட்ட சுவாஸம் குறையாததலால் பிராணன் வெகுகாலமிருக்கும். இப்பிராணயாமப் பிரபாவத்தால்தான் ஸௌபரி என்ற மஹரிஷி 12-வருடம் மூச்சு அடக்கிக்கொண்டு சமுத்திரஜலத்தில் தவம் புரிந்ததாயும், தன்மேல் புற்றுவளர்ந்து மூடும்படி சுவாஸத்தை அடக்கி வால்மீகி ச்யவனர் முதலியோர் தவம் புரிந்ததாயும் கூறப்படுகிறது. இதனால்தான் மார்க்கண்டேயர் தீர்க்க ஆயுள் பெற்றதாய் வெளியாகிறது. இவரது கதையில் மிருகண்டு மகரிஷி மூடர்களாய் தீர்க்காயுளுள்ளவர்களுமான அனேக புத்திரர்களைக்காட்டிலும் புத்திமானுன அல்பாயுளுள்ள புத்திரன் ஒருவன் போதுமென்று கேட்டதாயும் அவ்விதமே ஈசன் 16-வயதுள்ள பாலனை அனுக்கிரஹித்ததாயும் சிவபூஜையிலும் தவத்திலும்ஆழ்ந்த அப்புத்திரனின் 16-வயதில் யமனே நேரில்வந்து அழைக்கவே அவன் சிவத்தியா

னத்தில் மூழ்கி லிங்கத்தை ஆலிங்கனம் செய்துகொண்டதாயும் பிறகு யமன் சினங்கொண்டு சீறிப் பாசத்தால் லிங்கத்தையும் சேர்த்துச் சுற்றியிழுத்ததாயும் அப்போது அடங்காச் சினங் கொண்ட எம்பெருமான் லிங்கத்தினின்று தோன்றி யமனை இடதுகாலால் உதைத்துத்தள்ளியதாயும் பிறகு என்றும்பதினறு வயதுள்ளவன் என்று சொன்னதாயும் 'இருக்கிறது. இதன் ரக சியம் மந்திரசாஸ்திரப்படி இது. யமன் வந்தகாலத்தில் ஈசன் அவனைப் பார்த்து இவ்விதம் கூறினர். யமனே இம்மார்க்கண்டே யனுக்கு இப்போது 16-வயது ஆயிற்றென்று வந்தாய், இல்லை, இவன் பிறந்து இன்னும் 16-நிமிஷம் ஆகவில்லை. சூரியனின் கதி யால் எற்பட்ட தினத்தின் எற்பட்ட பக்ஷம் மாதம் ருது வருடம் முதலிய கணக்கின்படி வருடம் 16-தான். ஆனல் மனிபினின் ஆயுள் வருடத்திலில்லை. மற்று அவனுக்கு ஏற்பட்ட சுவாஸத் தின் கணக்குப்படிதான் ஜீவன் நிற்கும். ஆகவே இம்மார்க்கண் டேயன் என் பக்தன். என்னிடத்தில் அழ்ந்தபக்தியால் எப்போ தும் தியானத்தில் ஆழ்ந்து மூச்சையடக்கி தவத்தில் ஆழ்கிறான். ஆகவே 16 வருடமாய் விட்டிருக்கிற சுவாஸம் 2500 தான். ஒரு நாளுக்கு 21600-ல் இவ்வளவு 'வருஷமாய் 2500-என்றால் ஒரு தினத்தில் 8-ல் 1-பங்குதான் ஆய் இருக்கிறது. இந்தக்கணக்குப் படி இவனுக்கு 16-வயது ஆனபிறகு நீ வாலாமென்றார் என்று பொருள். இவ்விதம் இப்பிராணாயாமத்தின் மகிமை வெகுவாய் புகழப்படுகிறது. இனி இதனை விடுத்து முன் செல்வாம்.

ஜீவன் மூலாதாரத்திற்கு வந்து அங்கிருந்து குருபதேசப்படி கார்யம் செய்து ஸித்தியடைய வேண்டுமென்று முன்னம் கூறி னேமே. அதைத் தொடர்வாம். இனி அக்ஷரங்கள் அகாரம் முதல் க்ஷகாரம் வரை 50- என்பது நமது கணக்கு. இவ்வளவு அக்ஷரங்களை வியவஹாரத்திற்காக உச்சரிக்கிறோம். ஒவ் வொரு அக்ஷரத்திற்கும் உத்பத்திஸ்தானம் உண்டு. இது உயிர் எழுத்துக்கள் 15-ம் 5-வது விசுத்திஸ்தானமான கண்டதேசத்தில் 15-தளங்களாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதன் கீழ் 4-வது ஸ்தானமான ஹிருதயத்தில் कं காரம் முதல் ट முடிய 12-அக்ஷர தளங்கள். பிறகு மணிபூரகத்தில் ट விலிருந்து फ முடிய 10- அக்ஷரதளங்கள். ஸ்வாதிஷ்டானத்தில் स முதல் ण முகுய 5- அக்ஷரதளம். மூலாதாரத்தில் ल முதல் ष முடிய 4-அக்ஷரதளம்

ஆக்ஞையென்ற புருவமத்தியில் ग ह என்ற இரண்டுதளங்களும் அமைக்கப்பட்டிருப்பதாய் மந்திரசாஸ்திரத்தின் மர்மம். இதிலிருந்து இதை அறியலாம். இவ்விதம் அமைந்திருப்பதை இப்போது நாம் டைப்ரைடிங் மிஷினுக்கு ஒப்பிடலாம். அந்த மிஷினில் அக்ஷரங்கள் பல மாறுதல்களாய் வேறு வேறு ஸ்தானங்களில் அமைக்கப்பட்டிருப்பினும் நாம் இஷ்டமான வாக்கியம் சேர மூலை மூலை அக்ஷரங்களை அழுத்தியபோதிலும் நம் இஷ்டப்படி ஒரு வரிசையில் தான் அவைகள் வரிசையாய் நெருங்கி விழுந்து நம் இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறது. இதுபோல் சூக்ஷ்மதரிசிகள் அனுதிசித்தமாய் மனிதனது தேஹத்தில் முற்கூறியபடி அமைக்கப்பெற்ற அக்ஷரராசியை சாஸ்திரங்கள் மூலம் வெளிப்படுத்தி நாம் கடைத்தேற வழிகாட்டினார். இதனால் நமக்கு எவ்விதம் ஸாதகமெனில் ஜீவன் கடைத்தேற வேண்டுமென்று விரும்பினால் சாஸ்திரத்தை அனுஸரித்த மகனீயர்கள் அனுபவித்த மந்திரங்களை முறை தவறாது பீஜாக்ஷரங்களோடு தியானிக்க ஆரம்பித்தால் அவ்வக்ஷரங்களின் ஆர்த்த ரூபமான தெய்வத்தையே அழைக்கும். இதை நன்கு விளக்குகிறேன். ஸஹஸ்ராரம் என்ற நெற்றி ஸ்தானத்தில் பரமஜ்யோதிர்மயமாய் பராசக்தி விளங்கிவருகிறாளென்று முன்னம் கூறினேன். அந்தவிடத்தில் சேரிற்போய் இரண்டறகாப்பவனுக்கு த்ரிபுடி என்பது அற்றுவிடும். த்ரிபுடியாவது தியானிப்பவன், தியானிக்கப்படுவது தியானம் இம்மூன்று. இம்மூன்றும் நம்போன்றவர்களுக்குத் தனித்தனியே தோன்றுகின்றன. அதாவது ஜபம்செய்கிறவன் கண்ணைமூடி வாய்பேசாமல் ஜபித்தபோதிலும் முடிந்தபிறகு அவனைக்கேட்டாலவன் இவ்வாறு கூறுவான். நான் இதுகாறும் தியானத்தால் பரமாத்மாவை ஸேவித்தேனென்று ஆகவே நான் (தியானத்தால்) ஸேவித்தேன். பரமாத்மாவை என்ற மூன்று காணப்படுகிறது. இம்மூன்று அற்றவன் மகான் அப்புருடன் ஸுஷுப்தியிலிருந்து கிளம்பியவனுக்கு மேல்படியான ஸமாதியவஸ்தையினின்றும் ஒரு சமயம் வெளிப்படுவான் ஸமாதியிலிருக்கும்போது முற்கூறிய மூன்றும் அற்றுவிடும். அவ்வித நிலைக்கு வாதயோகிக்கு ஸஹஸ்ராரத்தில் ஒரே சக்தியென்று தோன்றுது. அனுநிவாஸனையால் தன் மனதுக்குவந்த ராமன் கிருஷ்ணன் தேவி சிவன் விநாயகர் முதலிய எத்தேவதையை வேண்டுமானாலும் பரம்பொருளாய் தியானிப்பான். அவ்விதம்

தியானிப்பவன் அந்தந்த தேவதையின் பெயரான மூலமந்திரத்தை உச்சரிக்கவோ, தியானிக்கவோ ஆரம்பிக்கும்போது அதிலுள்ள அக்ஷரங்களின் ஸ்தானத்தை தொடப்பட்டு அது டைப்பிஷின்போல சேர்ந்த வார்த்தையாய் ஸஹஸ்ராரத்தில் பட்டுத் தத்ரூபமான தேவதையாய் அந்தசக்தி பரிணமித்துஸாதகனுக்கு இஷ்டசித்தியை அளிக்கும். உதாரணமாய் ராமத்தியானத்தில் ர் ஆ ம அ என்ற அக்ஷரங்களின் ஸ்தானத்தைத் தொட்டதும் இவைகள்சேர்ந்து ராமாஎனறு ஸஹஸ்ராரத்தில்கூப்பிட்டுவிடுகிறது அங்கு அத்தேவதாஸ்வரூபம் அவனுக்குப்பிரதிபலிக்கும். இதற்கெல்லாம மூலமந்திரம் தான் பிரதானம். பீஜாக்ஷரமில்லாமல் ஒரு பிரயோஜனமும ஏற்படாது. குருபதேசம் இல்லாமலும் காரியம் கைகூடாது. இதை நமது பரமாசாரியாள் லலிதாத்ரிசதிபாஷ்யத்தில் ह्रीङ्कारपूज्य என்றவிடத்தில்

मूलमनुश्च देवतायाः स्वकंनाम अन्तर्मुखानामेव मन्त्रशास्त्रेषु तत्तन्नाम्ना व्युत्पन्नत्वात्। ह्रीङ्कारं नमोन्तमुच्चार्य यथागुरुसंप्रदायं श्रीचक्रादौ मूलदेवता पूजनीया इत्यागमरहस्यात् ॥

மூலமந்திரம்தான் அந்தந்தேவதையின் பெயர். துறவிகளுக்குத்தான் மந்திரசாஸ்திரரகஸ்யம் வெளிப்படும். ஆகவே ஹ்ரீங்காரத்தை நம: என்று முடிய உச்சரித்து குருஸம்பிரதாயம் தவராதுஸ்ரீசக்கிரம் முதலியதில் பூஜிக்கவேண்டுமென்பது சாஸ்திரரகஸ்யம் என்கிறார்கள். ஆகவே இவ்விதம் குரு ஸம்பிரதாயம் தவராது உச்சரித்து தியானம் செய்பவனுக்கு அந்த தேவதை ஸஹஸ்ராரத்தில் உதயமாகும். இதனால் இதொன்று நமக்கு வெளியாகிறது. மந்திரங்கள் பரமாத்மாவின் சக்தியை வெளிப்படுத்துகின்றன. அதன் மூலம் நமக்கு இஷ்டசித்தி கைகூடுகிறது. அம்மந்திரங்களில் அக்ஷரங்கள் ஸம்ஸ்கிருதமாய் ஹிருதயம் முதலிய ஸ்தானங்களில் அமைந்திருக்கின்றன. ஆகவே அதன் சமுதாய அர்த்தம் நமக்குத் தேவையில்லை. எவ்விதம் மந்திரம் அமைந்திருக்கிறதோ எவ்விதம் பரமகுரு உபதேசிக்கிறாரோ அவ்விதமே தியானம் செய்யவேண்டும் என்று இவ்விதம் ஸாதகம் செய்கிறவனுக்கு தேகவாஸனை உள்ளமட்டிலும் குருவின் பக்தியும் அனுக்கிரஹமும் இருக்கவேண்டும். இல்லாவிடில் எங்கும் தவறுதல் உண்டாகலாம. ஆதல்பற்றியே,

न गुरुं सन्त्यजेन्नित्यं जानन्नस्य कृतं नरः ।
गुरुभक्तिं सदा कुर्याच्छ्रेयसे भूयसे नरः ॥
वेदान् शास्त्राणि चान्यानि पादपांसुमिव त्यजेत् ।

ஸாதகன் உபகாரத்தை எண்ணி எப்போதும் விலக்காமலிருக்க வேண்டும். ஏராளமாய் சிரேயஸ்கிடைப்பதற்காக குருபக்தியை எப்போதுமே செய்யவேண்டும். வேதங்கள் சாஸ்திரங்களும் மற்றவைகளையும் தள்ளிவிடலாமென்றுர்.

इयं सीता मम सुता सहधर्मचरी तव ॥

இந்த ஸீதை என்னுடைய பெண். உனக்கு தர்மசாரிணீ என்று ஸ்ரீராமரைப்பார்த்து ஜனகர் சொன்னவிடத்தில், விவாஹமண்டபத்தில் உள்ள ரத்தின ஸ்தம்பங்களிலும் ஸ்படிகக்கண்ணுடிகளிலும் கோடிக்கணக்காய் பிரதிபலிக்கின்ற ஸீதையின் பிம்பங்களை பார்த்து ஸீதைதானேவென்று பிரமித்து போவாரென்று ஜனகர் இதோ ஸீதையென்று அடடிக்காட்டியதாய் ஓர் அர்த்தம் கூறுவதுண்டு. இதில் ரகஸ்யம் இது முற்கூறியவாறு ஸஹஸ்ராரத்தில் பராசக்தியோடு அதேரூபமுள்ள கோடிகோடி சக்திகணங்கள் சூழ்ந்திருக்கின்கன. ஸாதகன் ஸஹஸ்ராரத்தை தரிசனம் செய்யும் சக்தியையடைந்து பராசக்திதரிசனம் செய்புமுன் ருத்திரக்கிரந்திவிபேதனம் செய்துதிருவான். அதையனுஸரித்தே ஸாதகனை ராமர் குருவின் அனுக்கிரகத்தால் ருத்திரக்கிரந்தி என்ற ருத்திரதனுஸ்ஸை முறித்தார். உடனே பராசக்திதரிசனம்தான் வேண்டுவது அங்கு போகும்போதும் குருவின் அனுக்கிரகம் வேண்டும். அதில்லாமல்தான் விசுவாமித்திரர் தவம்புரிந்து சக்திதரிசனமடையுமுன் மேனகையைப்பார்த்து மயங்கி யோகத்தினின்று வழுவிவிட்டார். ஆகவே அதுபோல் ஸ்ரீராமன் மயங்கவேண்டாமென்று விசுவாமித்திரரே கூறவேண்டியிருக்க அச்சமயம் தன் விஷயத்தால் லஜ்ஜையடைந்து தலைகுனிந்துநிற்க ஜனகரென்ற யோகி குருஸ்தானத்தில் நின்று இவ்வசனம் கூறலானர். ராமா! பிரதிபிம்பகணங்களான பராசக்திபிம்பத்தைப் பார்த்து பிரமித்துவிடாதே. மூலபிம்பம் இதோ இருக்கிறதென்று அங்கும் குருவே சுட்டிக்காட்டினர். இதனல் குருவின் அனுக்கிரகம் எப்போதும் இருக்கவேண்டுமென்பது நிச்சயம். இவ்விதம் ஸ்ரீமத்ராமாயணம் முழுமையும் மந்திரசாஸ்திரமயமாகவே அர்த்தம் கூறுகின்றனர். அதை விரிக்கிற் பெருகுமென விடுகிறேன். மந்திரமாதாவான காயத்ரியின் மகிமையையும் அதன் பீஜாக்ஷர மகிமையையும் ஒவ்வொரு வேதத்தின் ஒவ்வொரு பாதமாய் 3-பாதம் பொருந்தியிருப்பதில் அவ்வவ்வேதத்தின் பூர்ணர்த்தம் அந்தந்த பாதத்தில் பொருந்தியிருப்பதையும் அதே அர்த்தம் அந்தந்த பீஜாக்ஷரத்திலிருக்கின்றதென்பதையும் தெளிவாய்க் கூறலாமாயினும் எழுத்தில் சுருதியைப்பற்றி எழுதுவது நமது வழக்கம் அல்லவென்று அவைதிகமென்றும் கொண்டு இவ்விஷயத்தை இத்துடன் நிறுத்துவாம். M. N. சுப்பிரமண்யசாஸ்திரிகள்.